இப்பகுதி தெற்கு வாய்க்கால் கரைச் சாலையை வடக்கு எல்லையாகவும், தெற்கு கடற்கரைச் சாலையை கிழக்கு எல்லையாகவும், கிரீன்வேய்ஸ் சாலையை தெற்கு எல்லையாகவும். நகரமைப்பு திட்டச் சாலையை மேற்கு எல்லையாகவும் கொண்டுள்ளது, சுமார் 40 ஏக்கர் நிலத்திலே இந்தத் திட்டம் மேம்படுத்த பட்டுள்ளது, இதனாலே சுற்றுப் புறச் சூழலுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் அந்த வனத் துறையினுடைய அறிவிப்பை நிறைவேற்றுகின்ற வண்ணம் வனப்பகுதி அங்கே உருவாக்கப் பட்டு சுற்றுபுறச்சூழலை பாதுகாப்பதற்காக இந்தப்பகுதி மேம் படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

Dr. BEATRIX D' SOUZA: Sir, I would like to know whether the Forest Department has given sanction for this scheme.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அங்கே வனப் பகுதியை உருவாக்கியிருக்கிற காரணத்தாலே வனத்துறையினுடைய அரசாணைக்கு எதிராக அங்கே எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது பாது காக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டு இருப்பது பறவை களை வேட்டையாடுவதை அது தடை செய்வதாக இருக்கிறதே தவிர வேறு எதற்கும் அங்கே வனத் துறை தடை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

68—

பட்டாசு மற்றும் தீப்பெட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

*9895—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் செய்யப்படும் பட்டாசு மற்றும் தீப்பெட்டிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

1993 அக்டோபர் 29]

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் இதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் இல்லை என்று கூறி விட்டார்கள். இருந்த போதிலும் பாலைவனமாக விளங்கக்கூடிய அந்த சிவகாசிப் பகுதியை பணத்தால் சோலைவனமாக ஆக்கிக் கொண்டிருக்கும் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழில்கள் 'இட் இஸ் ஏ சீசனல் எம்ப்ளாய்மெண்டு' தான் அங்கே இருக்கிறது. இப்போது அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் ஆண்டு முழுவதும் அங்கே தொழில்கள் நடைபெறுவதற்கு ஒரு சாத்தியம் நிலவுகிறது. கிட்டத்தட்ட 6 மாதங்கள் அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் எந்தவிதமான பயனும் பெற முடியாமல் அங்கே மிக கஷ்டத்தில் வாழ்கிறார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்காக அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனிப்பட்டவர்கள் அந்த ஏற்றுமதியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு அந்தப் பொறுப்பை ஏற்று, ஏற்றுமதி செய்கின்ற குறிப்பு எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு சில தனியார்கள் ஏற்றுமதி செய்த போதிலும் அவர்களுக்கு என்று (Shipping Corporation of India) எந்த ஒரு கப்பலையும் ஒதுக்குவது இல்லை. மேலும் அவர்கள் சார்ட்டடு வெசல் ஒன்று வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டுமென்றால் அதற்கு இங்கே போதிய அளவுக்கு சரக்குகள் இல்லை என்பதால் அவர்கள் யாரும் வருவதற்கு ஒப்புக்கொள்ளுவது இல்லை. மேலும் சிவகாசியைப் பொறுத்தவரையில் அங்கே அகல ரயில் பாதை இல்லாததால் ரயில்வே வேகன் வசதி கூட அங்கே இல்லாத சூழ்நிலை தான் இருக்கிறது. மேலும் எந்த ஒரு

இன்சூரன்ஸ் கம்பெனியும் because it is a hazardous cargo இன்சூர் செய்வதற்கு ஒத்துக்கொள்ளுவது இல்லை. இதையெல்லாம் அறிந்து தமிழக அரசே மத்திய அரசை அணுகி (Shipping Corpor tion of India) விலிருந்து தனிப்பட்ட முறையில் கப்பலை ஒதுக்கச் சொல்லுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 69, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 70, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்குதல்.

*19395— திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே'

தருமபுரி மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலில் தருமபுரி மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பெயரை சுதந்திரப் போராட்டத் தலைவர் சுப்பிரமணிய சிவா என்று பெயரை மாற்றியதற்கு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு நேற்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தீபாவளி போனசாக கரும்பு விவசாய பெருமக்களுக்கு